சிவப்பிரகாசசுவாமிகள் அருளிச்செய்த

நன்னெறி

[உரையுடன்]

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலர்.

விலை அணா 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை.

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

நன்னெறி.

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்களால்

திருத்தப்பட்ட உரையுடன்

அவர்கள் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத்

தருமபரிபாலகரால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

ஆறம் பதிப்பு.

ருதிரோத்காரி௵ பங்குனிமீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை.

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள் அருளிச்செய்த

நன்னெறி.

காப்பு.

மின்னெறி சடாமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே

க. என்று முகம னியம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழ்வோ
நாவிற் குதவு நயந்து.

உ. மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொற் பிறிதென்க—ஈசற்கு
நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு.

ங. தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்
தங்கட் குரியவராற் றாங்கொள்க—தங்கநெடுங்
குன்றினாற் செய்தனைய கொங்கையா யாவின்பால்
கன்றினாற் கொள்ப கறந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௪. பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

௫. நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலு
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம்.

௬. காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கறான்
கண்ணிரண்டு மொன்றையே காண்.

௭. கடலே யனையம்யாங் கல்வியா லென்னும்
அடலே றனைய செருக்காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும்.

௮. உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு.

௯. மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவிற்—பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து.

௧௦. தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே னின்று.

௧௧. பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாந்—துப்பிற்
சுழற்றுங்கொல் கற்றாணைச் சூறா வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் றுரும்பு.

௧௨. வருந்து முயிரொன்பான் வாயிலுடம்பிற்
பொருந்துத றானே புதுமை—திருந்திழாய்
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு.

௧௩. பெருக்க மொடுசுருக்கம் பெற்றபொருட் கேற்ப
விருப்ப மொடுகொடுப்பர் மேலோர்—சுரக்கு
மலையளவு நின்றமுலை மாதே மதியின்
கலையளவு நின்ற கதிர்.

௧௪. தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்
இரைக்கும்வண் டூதமல ரீர்ங்கோதாய் மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு.

௧௫. இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யு—நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூ றெரியும்
விழியிலார்க் கேது விளக்கு.

௧௬. தம்மையுந் தங்க டலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ் செல்லாதோ கடல்.

௧௭. எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் மீகை மறுப்பரோ—பைந்தொடீ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஅ. இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல்.

ககூ. நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவா னழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர.

உ0. பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியி னிழுதாவ ரென்க—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

உக. எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையாம்—எழுத்தறிவார்
ஆயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை.

உஉ. ஆக்கு மறிவா னலது பிறப்பினான்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு.

உ௩. பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்றல்
திகழ்ச்சி தருநெஞ்சத் திட்ப—நெகிழ்ச்சி
பெறும்பூரிக் கின்றமுலைப் பேதாய் பலகால்
எறும்பூரக் கற்குழியு மே.

உச. உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி.

உரு. கல்லா வறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகன நண்ணாரே—வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணாய் நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள்.

உசு. உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்—மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு.

உஎ. கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வர்—அம்மா
முளைக்கு மெயிறு முதிர்சுவை நாவிறகு
விளைக்கும் வலியனதா மென்று.

உஅ. முனிவினு நல்குவர் மூதறிஞ ருள்ளக்
கனிவினு நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்
தாயினு மாமோ வறை.

உகூ. உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
அடுக்கு மொருகோடி யாக—நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியா யஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான்.

௩0. கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு.

௩க. பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாக்குங் கடிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௩௨. பன்னும் பனுவற் பயன்றே ரறிவிலார்
மன்னு மறங்கள் வலியிலவே— நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான்.

௩௩. எள்ளா திருப்ப விழிஞர்போற் றற்குறியர்
விள்ளா வறிஞரது வேண்டாரே—தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல்.

௩௪. அறிவுடையா ரன்றி யதுபெறார் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும்—பிறைநுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு.

௩௫. கற்ற வறிவினரைக் காமுறுவர் மேன்மக்கண்
மற்றையர்தா மென்று மதியாரே— வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம்.

௩௬. தக்கார்க்கே யீவர் தசார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்.

௩௭. பெரியோர்முற் றன்னைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்வகன்று தாழுந்—தெரியாய்கொல்
பொன்னுயர்வு தீர்த்த புணர்முலையாய் விந்தமலை
தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து.

௩௮. நல்லார் செயுங்கேண்மை நாடோறு நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை யாகாதே—நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம்.

௩௯. கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
உற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே—பொற்றொடீ
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
அன்றே மணமுடைய தாம்.

௪0. பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றெவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னெறி உரை.

காப்பு.

இதன்பொருள். மின் எறி சடாமுடி விநாயகன் அடி தொழ - மின்னொளியை வீசுகின்ற சடாமுடியையுடைய விநாயகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கினால்,—நன்னெறி வெண்பா நாற்பதும் வரும் - நன்னெறி என்னும் நூலில் உள்ள நாற்பது வெண்பாவும் வரும். என்றவாறு. ஏ ஈற்றசை.

இதனது தாற்பரியம். விநாயகவணக்கஞ்செய்யின், நன்னெறி என்னும் நூல் இடையூறின்றி இனிது முடியும். என்பதாம்.

க. இ - ள். பூவின் பொலி குழலாய் - பூவினால் விளங்குகின்ற கூந்தலையுடையவளே,—தீது அற்றோர் - குற்றமற்றவராகிய பெரியோர்,—என்றும் முகமன் இயம்பாதவர் கண்ணும் - யாதொருநாளிலும் (தமக்கு) உபசாரவார்த்தைகளைச் சொல்லாதவரிடத்திலும்,—பொருள் சென்று கொடுப்பர் - (தமக்குக்கிடைத்த) பொருளைத் (தாமே) கொண்டுபோய்க் கொடுப்பார்;—பூம் கை-அழகிய கையானது,—புகழவோ - (தன்னைப்) புகழ்தற்கா,—துன்று சுவை நாவிற்கு நயந்து உதவும்-(தனக்குக்) கிடைத்த மதுரமாகிய உணவை நாவினுக்கு விரும்பிக் (கொண்டுபோய்க்) கொடுக்கும், (புகழ்தற்கன்று.) எ - று.

இ-ம். பெரியோர் உபசாரவார்த்தை பேசாதவருக்கும் தாமே தேடிப்போய்ப் பொருள் கொடுப்பர். எ - ம்.

உ. இ - ள். நல் நுதால் - நல்ல நெற்றியை உடையவளே,—மாசு அற்ற நெஞ்சு உடையார் வன்சொல் இனிது - குற்றந்தீர்ந்த மனத்தையுடையவரது கடுஞ்சொல்லும் இனியதாகும்,—ஏனையவர் பேசுற்ற இன்சொல் பிறிது என்க - (குற்றம் பொருந்திய மனத்தையுடையவராகிய) பிறர் சொல்லிய இன்சொல்லும் கொடியதாகும்

என்று அறிவாயாக:—ஈசற்கு விருப்பு - சிவபெருமானுக்கு விருப்பத்தைக்கொடுத்தது—நல்லோன் எறிசிலையோ - நற்குணமுடையவராகிய சாக்கியநாயனார் (அன்போடு) எறிந்த கல்லோ,—ஒள் கருப்பு வில்லோன் மலரோ - ஒள்ளிய கருப்புவில்லையுடைய மன்மதன் (அன்பின்றி) எறிந்த பூவோ. எ - று.

இ-ம். மனநன்மையுடையோருடைய கடுஞ்சொல்லும் இன்பம் விளைக்கும்; மனநன்மையில்லாதவருடைய இன்சொல்லும் துன்பம் விளைக்கும். எ-ம்.

ங. இ - ள். நெடும் தங்கக் குன்றினால் செய்து அனைய கொங்கையாய் - நெடிய பொன்மலையினாலே செய்தாற்போன்ற தனங்களையுடையவளே,—தங்கட்கு உதவிலர்கைத் தாம் ஒன்று கொள்ளின் - தங்களுக்கு உதவாதவர்களுடைய கையினின்றும் தாங்கள் ஒரு பொருளைக் கொள்ளவேண்டினால்,—அவர் தங்கட்கு உரியவரால் தாம் கொள்க - அவர்களுக்கு உரியவராலே (அப்பொருளைத்) தாங்கள் கொள்ளக்கடவர்கள்;—ஆவின் பால் கன்றினால் கறந்து கொள்ப - (தங்களுக்குக் கொடாத) பசுவினுடைய பாலை (அப்பசுவுக்குரிய) கன்றைக்கொண்டு கறந்துகொள்வார்கள். எ - று.

இ - ம். தமக்கு உதவாதவரிடத்தில் ஒருபொருள்பெறவேண்டின், அதனை அவருக்கு உரியவரைக் கொண்டு பெறல்வேண்டும். எ-ம்.

ச. இ - ள். பிறர்க்கு உதவி செய்யார் பெருஞ்செல்வம் - பிறருக்கு உபகாரஞ் செய்யாதவருடைய பெரிய செல்வமானது,—வேறு - பிறிதேயாயினும்,—பிறர்க்கு உதவி ஆக்குபவர் பேறு ஆம்- பிறருக்கு உபகாரஞ் செய்பவருடைய செல்வமாகும்:—பிறர்க்கு உதவி செய்யாக் கருங்கடல் நீர் - பிறருக்கு உபகாரஞ் செய்யாத கரிய சமுத்திரத்திலுள்ள நீரை—புயல் சென்று முகந்து பிறர்க்குப் பெய்யாக் கொடுக்கும் - மேகமானது போய் மொண்டுவந்து பிறருக்குப் பெய்து கொடுக்கும். எ - று.

இ-ம். ஒருவர் உபகரிக்கும் பொருள் பிறர் பொருளே யாயினும், அவ்வுபகரிப்போர் பொருளாகவே கொள்ளப்படும். எ-ம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௫. இ - ள். பூ குழலாய் - பூக்களை முடித்த கூந்தலையுடையவளே,—நீக்கம் அறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும் - பிரிவு இல்லாத சிநேகர் இருவர் (பகைத்துச் சிறிது காலம்) பிரிந்து (முன்போலவே) கூடினாலும்,—நோக்கின் அவர் பெருமை நொய்து ஆகும் - பார்க்குமிடத்து அவருடைய பெருமை அற்பமாகும்.—நெல்லின் உமி சிறிது நீங்கிப் பழமைபோல் புல்லினும் - நெல்லினின்றும் உமியானது சிறிது நீங்கி முன்போலவே கூடினாலும்,—திண்மை நிலைபோம் - அதற்கு முன்னே முளைத்தற்குக் காரணமாக (அந்நெல்லினிடத்து இருந்த) வலியினது நிலையானது கெட்டுப்போம். எ - று.

இ-ம். பகைத்துக் கூடினவருடைய நட்பு வலியுடையதன்று. எ-ம்.

௬. இ - ள். ஓது எண்ணிரண்டு கலையும் ஒன்றும் மதி என் முகத்தாய் - புகழப்பட்ட பதினாறு கலைகளுஞ் சேர்ந்த சந்திரன் என்று சொல்லப்படும் முகத்தையுடையவளே,—காதல் மனையாளும் காதலனும் - அன்பையுடைய மனைவியும் கணவனும்—மாறு இன்றித் தீது இல் ஒரு கருமமே செய்ப - (தம்முள்ளே) மாறுபாடில்லாமல் (ஒத்துக்) குற்றமில்லாத ஒரு கருமத்தையே செய்வர்:—கண் இரண்டும் ஒன்றையே நோக்கல் காண் - (நம்முடைய) இரண்டு கண்களும் (தம்முள்ளே மாறுபடாமல் ஒத்து) ஒருபொருளையே பார்த்தலை நீ பார். எ - று. தான் அசை.

இ-ம். கணவனும் மனைவியும் ஒத்துச் செய்யும் அறமே நிறைவேறும். எ-ம்.

௭. இ - ள். யாம் கல்வியால் கடலே அனையம் என்னும் - நாம் கல்வியறிவினாற் சமுத்திரத்தை ஒப்பேம் என்று கொள்கின்ற—அடல் ஏறு அனைய செருக்கு ஆழ்த்தி விடல் - வலிமைபொருந்திய ஆண்சிங்கத்தினது செருக்கைப்போலுஞ் செருக்கிலே (உங்களை) அமிழ்த்திவிடாதிருங்கள்:—முழங்கும் பனிக்கடலும் - ஒலிக்கின்ற குளிர்ச்சிபொருந்திய சமுத்திரமும்—முனிக்கு அரசு கையால் முகந்து உண்ணப்படும் - முனிவர்களுக்குத் தலைவராகிய அகத்திய முனிவருடைய கையினால் மொண்டு பருகப்படும். எ - று. ஏ அசை.

இ-ம். எத்துணைப் பெருங்கல்வியுடையவரும், செருக்கடைவாராயின், வல்லவரொருவராலே தப்பாது வெல்லப்படுவர். எ-ம்.

௮. இ - ள். உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் - மனத்தைத் தன்வயத்ததாக்கிக்கொண்டு எழுந்து வளர்கின்ற கோபத்தை,—காத்துக் கொள்ளும் குணமே குணம் என்க - அடக்கிக்கொள்கின்ற குணமே (அருமையாகிய) குணம் என்று அறியக்கடவாய்:—வெள்ளம் தடுத்தல் அரிதோ - (பெருகிவருகின்ற) வெள்ளத்தைக் (கரைகட்டித்) தடுத்தல் அரியதோ,—தடம் கரை பேர்த்து விடுத்தல் அரிதோ - (முன் கட்டப்பட்டிருந்த) பெரிய கரையை உடைத்து (அதனுள் அடங்கியிருந்த வெள்ளத்தைப் புறத்திலே செல்ல) விடுத்தல் அரியதோ,—விளம்பு - நீ சொல்வாயாக. எ - று. தான் அசை.

இ-ம். கோபத்தைச் செய்தல் எளிது, கோபத்தை அடக்கல் அரிது ஆதலின், அரியதைச் செய்தலே பெருமை. எ-ம்.

௯. இ - ள். மெலியோர் - வலியில்லாதவர்,—வலிய விரவலரை - வலியையுடைய பகைவருக்கு,—தாம் வலியோர் தமை மருவில் அஞ்சார் - தாம் (அவரினும்) வலியோரைச் சேர்ந்தால், பயப்படார்,—பலி ஏல் கடவுள் அவிர்சடைமேல் கட்செவி - (அன்பருடைய) பூசையை ஏற்றுக்கொள்ளுஞ் சிவபெருமானுடைய விளங்குகின்ற சடையின்மேல் இருக்கின்ற பாம்பானது,—படர் சிறை அப்புள் அரசைப் பார்த்து அஞ்சாது - (தன்முன்) வந்த சிறைகளையுடைய அக்கருடனைப் பார்த்துப் பயப்படாது. எ - று. ஏ அசை.

இ-ம். பகைவர் வலியவராயவிடத்து, அவரினும் வலியவரைச் சேர்ந்தாற் பயமில்லை. எ-ம்.

௧௦. இ - ள். விழுமியோர் - மேலோர்,—தம் குறை தீர்வு உள்ளார் - தமது குறை நீங்குதலை நினையாராகி,—பிறர்க்கு உறும் வெம் குறை தளர்ந்து தீர்க்கிற்பார் - பிறருக்கு வந்த வெவ்விய குறையை மனந்தளர்ந்து நீக்குவார்:—திங்கள் - சந்திரனானவன்,—கறை இருளை நீக்கக் கருதாது - (தனது) களங்கமாகிய இருளை நீக்குதற்கு நினையாமல்,—மேல் நின்று உலகின் நிறை இருளை நீக்கும் - ஆகாயத்திலே நின்று உலகத்து நிறைந்த இருளை நீக்குவான். எ - று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ-ம். மேலோர் தங்குறையை நீக்காது பிறர்குறையை நீக்குவர். எ-ம்.

கக. இ - ள். பொய்ப் புலன்கள் ஐந்தும் - பொய்யாகிய ஐந்து புலன்களும்,—புல்லியர் பால் அன்றி மெய்ப் புலவர் தம்பால் நோய் விளையா - மூடரிடத்தல்லாமல் மெய்யறிவுடையவரிடத்தே துன்பத்தைச் செய்யாவாம்,—சூறுவளி போய் - சுழல்காற்றானது சென்று,—துப்பின் சிறு புல் துரும்பு சுழற்றும் - (தன்) வலிமையினாலே, சிறிய இலகுவாகிய துரும்பை (எடுத்துச்) சுழற்றும்,—கல் தூணைச் சுழற்றும் கொல் - கல்லுக்கம்பத்தைச் சுழற்றுமா (சுழற்ற மாட்டாது.) எ - று. ஏ ஆம் அசை.

புலன்களைந்தாவன சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் என்பனவாம்.

இ-ம். ஐம்புலன்களினால் மூடரேயன்றி மெய்யறிவுடையவர் துன்பமடையார். எ-ம்.

கஉ. இ - ள். திருந்து இழாய் - திருந்திய ஆபரணத்தையுடையவளே,—வருந்தும் உயிர் - வருந்துகின்ற உயிரானது,—ஒன்பான் வாயில் உடம்பில் பொருந்துதலே புதுமை-ஒன்பது துவாரங்களையுடைய உடம்பிலே தங்குதலே ஆச்சரியம்; (நீங்குதல் ஆச்சரியமன்று:)—சீத நீர்-குளிர்ச்சியாகிய நீரானது—பொள்ளல் சிறு குடத்து நில்லாது வீதலோ-இல்லியையுடைய சிறிய குடத்திலே நில்லாது ஒழுகிப்போதலோ (ஆச்சரியம்)—நிற்றல் வியப்பு - நிற்றலே ஆச்சரியமாகும். எ - று. தான் அசை.

இ-ம். ஒன்பது துவாரங்களுடைய உடம்பிலே உயிர்நிற்றலுக்கன்றி நீங்குதலுக்கு ஆச்சரியமடைதல் பேதைமை. எ-ம்.

கங. இ - ள். மலை அளவு நின்ற சுரக்கும் முலை மாதே - மலையளவாக நின்ற (பால்) சுரக்கின்ற தனங்களையுடைய பெண்ணே,—மேலோர் - பெரியோர்,—பெருக்கமொடு சுருக்கம் பெற்ற பொருட்கு ஏற்ப - வளர்தலையும் குறைதலையும் பொருந்திய செல்வத்திற்கு இசைய,—விருப்பமொடு கொடுப்பர் - ஆசையோடு கொடுப்பர்:—மதியின் கதிர் கலை அளவு நின்ற - சந்திரனுடைய கிரணங்கள் (வளர்தலையுந் தேய்தலையும் பொருந்திய) கலைகளினளவாக நின்றன. எ - று.

இ-ம். பெரியோர் தாம் பெற்ற செல்வத்திற் கேற்ப அதிகமாகவும் குறைவாகவுங் கொடுப்பர். எ-ம்.

கச. இ - ள். இரைக்கும் வண்டு ஊதும் மலர் ஈர்ங்கோதாய்-ஒலிக்கின்ற வண்டுகள் ஊதுகின்ற பூக்களாலாகிய குளிர்ச்சி பொருந்திய மாலையையுடையவளே,—தலையாயவர் - தலைமையாகிய அறிவையுடையவர்,—தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோம் என்று - (எக்காலத்தினும்) அழியாத பெரியசெல்வத்திலே பிறந்திருக்கின்றோம் என்று,—செருக்குச் சார்தல் இலை-செருக்கை அடைதல் இல்லை:—மேரு வரைக்கும் வளைவு வந்தன்று - (எக்காலத்தினும் அசைவற்றிருந்த) மகாமேருமலைக்கும் (ஒருகாலத்தில்) வளைவு வந்தது. எ-று. ஆல் அசை.

இ-ம். எத்துணைப் பெருஞ்செல்வத்துக்கும் அழிவுவருமென்றறிந்து அடங்குவோரே அறிவுடையோர். எ-ம்.

கரு. இ - ள். நல்லாய் - நற்குணமுடையவளே,—இங்கு அன்பு இல்லானுக்கு - இவ்வுலகத்தில் அன்பில்லாதவனுக்கு—இடம் பொருள் ஏவல் எல்லாம் இருந்தும் - இடமும் பொருளும் ஏவலுமாகிய இவை யெல்லாம் இருந்தும்—அவற்கு என்செய்யும் - அவனுக்கு யாது பயனைச் செய்யும்.—மொழி இலார்க்கு முதுநூல் ஏது - பேச்சில்லாதவராகிய ஊமைகளுக்குப் பழமையாகிய நூல் யாது பயனைச் செய்யும்!—தெரியும் விழி இலார்க்கு விளக்கு ஏது - பார்க்கின்ற கண்ணில்லாதவராகிய குருடருக்குத் தீபம் யாது பயனைச் செய்யும்! எ - று. மற்று அசை.

இ-ம். அன்பில்லாதவன், இடம் பொருளேவல்களுடையவனாயினும், அவைகொண்டு தருமமும் புகழுஞ் செய்துகொள்ள மாட்டான். எ-ம்.

கசு. இ - ள். உயர்ந்தோர்-(அறிவொழுக்கங்களினால்) உயர்ந்தவர்கள்,—தமை அடைந்தோர் தம்மின் இழியினும் - தங்களை அடைந்தவர்கள் தங்களைப்பார்க்கினும் தாழ்ந்தவர்களாயினும்,—தம்மையும் தங்கள் தலைமையும் பார்த்து தம்மை மதியார் - தங்களையும் தங்களுடைய தலைமையையும் பார்த்துத் தங்களை மதியாதவர்களாகி,—செல்வர் இடர் தீர்ப்பர் - (அவர்கள் இருக்கும்

இடத்துக்குப்) போய் (அவர்களுடைய) துன்பத்தை நீக்குவர்கள்:— கடல் அல்கு கழியினும் செல்லாதோ - (பெரிய) சமுத்திரமானது (தன்னை அடுத்த) சிறிய உப்பங்கழியினும் போய்ப் பாயாதோ (போய்ப் பாயும்) எ-று. அல்கல் - சுருங்கல்.

இ-ம். மேலோர், தம்மிற் றாழ்ந்தவரையும், செருக்கின்றி அவ ரிடந்தேடிச் சென்று, பாதுகாப்பர். எ-ம்.

கஎ. இ - ள். பைந்தொடீ - பசும்பொன்னாலாகிய வளையல் களையுடையவளே,—எந்தை இரப்பார்க்கு ஈந்து நல்கூர்ந்தான் என்று-எங்கள் பிதா இரப்பவருக்குக் கொடுத்துத் தரித்திரனானான் என்று,—அவன் மைந்தர் தம் ஈகை மறுப்பரோ - அவனுடைய புத்திரர் தமது கொடையை விடுவாரோ (விடார்:)—நின்று பயன் உதவி நில்லா அரம்பையின் கீழ்க் கன்றும் கனி உதவும் - (முன்னே அழிவில்லாமல்) நின்றுகொண்டு (பழமாகிய) பயனைக் கொடுத்து (அதனாலே) அழிவை யடைந்த வாழைமரத்தின்கீழ் நிற்கின்ற அதன் கன்றும் பழத்தைக் கொடுக்கும். எ - று.

இ-ம். தந்தை கொடையினாலே தரித்திரனானானென்று அவன் புத்திரர் கொடையை விடார். எ-ம்.

கஅ. இ - ள். பொன் செய் அதிர் வளையாய் - பொன்னாலே செய்யப்பட்ட ஒலிக்கின்ற வளையல்களையுடையவளே,—இரு நீர் வியன் உலகம் - பெரிய கடல் சூழ்ந்த பரந்த உலகத்திலுள்ளவர்— இன்சொலால் அன்றி வன்சொலால் என்றும் மகிழாது-இன்சொல் லினாலல்லாமற் கடுஞ்சொல்லினால் எந்நாளும் மகிழ்ச்சியடையார்:— கடல் தண் என் கதிர்வரவால் பொங்கும் - கடலானது குளிர்ச்சி பொருந்திய கிரணங்களையுடைய சந்திரன் வருகையினாலே பொங் கும்—(அதுவன்றி)—அழற்கதிரால் பொங்காது - சூடு பொருந்திய கிரணங்களையுடைய சூரியன் வருகையினாலே பொங்காது. எ - று. ஏ அசை.

இ-ம். இன்சொல்லினாலன்றி வன்சொல்லினால் ஒருவரும் மகிழ்ச்சியடையார். எ-ம்.

கக. இ - ள். வல்லோர் - (கல்வியறிவில்) வல்லவர்,—நல் லோர் வரவால் முகநகை கொண்டு இன்பு உறீஇ - நல்லவருடைய

வருகையினாலே முகமலர்ச்சி கொண்டு இன்பத்தை அடைந்து,— அல்லோர் வரவால் அழுங்குவார் - தீயவருடைய வருகையினாலே துன்பத்தை அடைவார்:—தேமா - தேமாமரமானது—தென்றல் வரத் தளிர் காட்டித் திருந்தும் - தென்றற்காற்று வரத் தளிரைக் காட்டிச் சிறப்புற்றிருக்கும்,—சுழல்கால்வர வருந்தும்-சுழல்காற்று வர வருந்தும். எ - று.

இ-ம். கல்வியறிவுடையவருக்கு, நல்லோர் வரவினாலே இன்ப மும், தீயோர் வரவினாலே துன்பமும் விளையும். எ-ம்.

உ0. இ - ள். தெரி இழாய் - ஆராய்ந்த ஆபரணத்தையுடை யவளே,—பெரியவர் - (அறிவொழுக்கங்களிற்) பெரியவர்,—பிறர் நோய் கண்டு - பிறருக்கு வந்த நோயைக் கண்டு,—தம் நோய் போல் உள்ளம் எரியின் இழுது ஆவர் என்க - தமக்கு வந்தநோய் போல நினைத்து மனம் அக்கினியிலே பட்ட நெய்போல உருகு வார் என்று அறியக்கடவாய்:—கண் மண்டு பிணியால் வருந்து பிற உறுப்பைக் கண்டு கலுழும் - கண்களானவை நெருங்கிய வியாதி யினால் வருந்துகின்ற மற்றை அவயவங்களைக் கண்டு அழும். எ-று. ஏ அசை.

இ-ம். பிறருக்கு வருந்துன்பத்தைக் கண்டபோது இரங்குதல் பெரியோருக்கு இயல்பாம். எ-ம்.

உக. இ-ள். எழுத்து அறியார் கல்விப் பெருக்கம் அனைத் தும் - இலக்கணநூலை அறியாதவருடைய மற்றைக் கல்வியினது பெருக்கமுழுதும்—எழுத்து அறிவார்க் காணின் இலை - இலக்கண நூலை அறிந்தவரைக்கண்டால் இல்லாமற்போகும்:—சுர நீர் மிகை- ஆகாயகங்கையினுடைய பெருக்கமானது,—எழுத்து அறிவார் ஆயும் கடவுள் அவிர் சடை முன் கண்ட அளவில் வீயும் - எழுத்துக் களினியல்பை அறியும் பெரியோர் ஆராய்கின்ற சிவபெருமானது விளங்குகின்ற சடையைத் தன்முன் கண்டவளவிலே, நீங்கிவிடும். எ - று. ஆம் அசை.

இ-ம். இலக்கணநூலுணர்ச்சி யில்லாதவருடைய கல்வி இலக் கண நூலுணர்ச்சியுடையாரெதிரே பயன்படாது. எ-ம்.

உ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உஉ. இ - ள். மீக்கொள் உயர்வு இழிவு - மேலாகக் கொள்கின்ற உயர்வையும் (கீழாகக் கொள்கின்ற) இழிவையும்,—ஆக்கும் அறிவான் அலது பிறப்பினான் வேண்டற்க - (நற்குணங்களை) உண்டாக்குகின்ற கல்வியறிவினாலல்லாமல், சாதியினாலே விரும்பாதிருக்கக்கடவீர்,—அரவின் பரு மணி கண்டு நீக்குபவர் ஆர் - (நஞ்சையுடைய) பாம்பினிடத்து உண்டாகிய பருத்த மாணிக்கத்தைக் கண்டு நீக்குவோர் யாவர்? (ஒருவருமில்லை),—கடலின் கடு என்றும் கவரார் - பாற்கடலினிடத்து உண்டாகிய நஞ்சை ஒருநாளும் கொள்ளார். எ - று.

இ-ம். உயர்குலத்தானாயினும் அறிவில்லாதவனை இழிந்தவனாகவும், இழிகுலத்தானாயினும் அறிவுடையவனை உயர்ந்தவனாகவும் கொள்ளல்வேண்டும். எ-ம்.

உங. இ - ள். பூரிக்கின்ற முலைப் பேதாய் - விம்முகின்ற தனங்களையுடைய பெண்ணே,—மடவார் பகர்ச்சி பயில - பெண்கள் (ஒருவன்பக்கத்தில்) வாய்ப்பேச்சோடு பழகிக்கொண்டுவந்தாலும்,—நோன்பு ஆற்றல் திகழ்ச்சி தரும் நெஞ்சத்திட்பம் நெகிழ்ச்சி பெறும் - தவத்தைச்செய்தலில் விளங்குகின்ற (அவனுடைய) மனத்தினது உறுதியானது (நாளுக்கு நாள்) தளர்ந்துபோகும்,—பல கால் எறும்பு ஊரக் கல் குழியும்-பலதரம் சிற்றெறும்புகள் ஊர்ந்துகொண்டு வந்தாலும், கருங்கல்லும் குழிந்துபோகும். எ - று. ஏ அசை.

இ-ம். பெண்களது வாய்ப்பேச்சோடு பழகினும், தவஞ்செய்வோனுக்கு மனவுறுதி கெடும். எ-ம்.

உச. இ - ள். இங்கு ஒருவர்க்குக் குணம் உண்டு எனினும் - இவ்வுலகத்திலே ஒருவருக்கு நற்குணம் உள்ளதாயினும்,—கீழ் கொண்டு புகல்வது அவர் குற்றமே - கீழோர் எடுத்துப்பேசுவது அவருடைய குற்றமேயாகும்,—செழும் பொழில்வாய் - செழுமையாகிய சோலையினிடத்தே,—மலர்ச் சேக்கை வண்டு விரும்பும் - பூவாகிய மெத்தையை வண்டுகள் விரும்பும்,—வேம்பு அன்றோ காக்கை விரும்பும் கனி-வேப்பம்பழமன்றோ காக்கைகள் விரும்பும் பழம். எ - று.

இ-ம். ஒருவனிடத்துள்ள நற்குணத்தையே மேலோர் எடுத்துப்பேசுவர், தீக்குணத்தையே கீழோர் எடுத்துப்பேசுவர். எ-ம்.

உரு. இ - ள். வில் ஆர் கணையின் பொலியும் கருங்கண்ணாய் - வில்லோடு கூடிய அம்பைப்போலப் (புருவத்தோடு கூடி) விளங்குகின்ற கருமையாகிய கண்களையுடையவளே,—கல்லா அறிவின் கயவர்பால் - கல்லாத அறிவையுடைய மூடரிடத்திலே(சேர்ந்தால்,)—கற்று உணர்ந்த நல்லார் தமது கனம் நண்ணார் - கற்றறிந்த நல்லோர் தமது பெருமையை இழப்பர்,—புணையில் புகும் ஒள்பொருள் நொய்து ஆம் - (கனமில்லாத) தெப்பத்திலே சேர்ந்த கனமுடைய பொருள் இலகுவாகும். எ - று.

இ-ம். கற்றறிந்தவர் மூடரிடத்தே சென்றால் தமது பெருமையை இழப்பர். எ-ம்.

உசு. இ - ள். மடவரால் - இளம்பெண்ணே,—ஒள் புலவர் உடலின் சிறுமை கண்டு - ஒள்ளிய புலவருடைய சரீரத்தின் சிறுமையைக் கண்டு,—கல்விக் கடலின் பெருமை கடவார் - (அவரது) கல்வியாகிய கடலின் பெருமையை (ஒருவரும்) கடக்கமாட்டார்,—கதிர் காணும் ஒளி - சூரியனுடைய ஒளியோடு கூடிக் காண்கின்ற கருமணியொளியானது,—கண் அளவு ஆய் நின்றதோ! - தனக்கிடமாகிய (சிறிய) கண்ணினளவாக அடங்கிநின்றதோ!—விண் அளவு ஆயிற்றோ விளம்பு - (தான் காண்கின்ற பெரிய) ஆகாயத்தினளவாக வியாபித்து நின்றதோ? நீ சொல்வாயாக. எ - று. தான் அசை.

இ-ம். உருவத்தாற் சிறியவரும் அறிவினாற் பெரியவராயிருப்பர். எ-ம்.

உஎ. இ - ள். கற்று அறிந்தோர் - கற்றறிந்தவர்,—கைம்மாறு உகவாமல்-பிரதியுபகாரத்தை விரும்பாமல்,—மெய்வருந்தித் தம்மால் இயல் உதவி தாம் செய்வர் - சரீரம் வருந்தித் தம்மால் இயன்ற உதவிகளைத் தாமே செய்வர்,—முளைக்கும் எயிறு - முளைக்கின்ற பற்களானவை,—நாவிற்கு - (தமக்கு ஒருபகாரமுஞ் செய்தற்கு இயலாத (நாக்குக்கு,—வலியன தாம் மென்று முதிர் சுவை விளைக்கும் - கடினமாகிய தின்பண்டங்களைத் தாமே மென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து நிறைந்த சுவையை உண்டாக்கும். எ - று. அம்மா வியப்பிடைச்சொல்.

இ-ம். அறிவுடையவர் கைம்மாறு வேண்டாமலே பிறருக்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்வர். எ-ம்.

௨௮. இ - ள். மூதறிஞர் முனிவினும் நல்குவர் - பேரறிவுடையவர் கோபமுள்ள காலத்திலும் கொடுப்பர்,—கயவர் உள்ளக் கனிவினும் நல்கார் - மூடர் மனமகிழ்ச்சி உள்ள காலத்திலும் கொடார்,—கதலி நனி விளைவு இல் காயினும் ஆகும் - வாழையானது மிக முற்றுதலில்லாத காயினாலும் பயன் படும்,—எட்டி பழுத்து ஆயினும் ஆமோ அறை—எட்டியானது பழுத்தாலும் பயன் படுமோ, நீ சொல்வாயாக. எ - று. தான் அசை.

இ-ம். அறிவுடையவர் கோபத்தினுங் கொடுப்பர், மூடர் மகிழ்ச்சியினுங்கொடார். எ-ம்.

௨௯. இ - ள். பண்ணின் புகலும் பனிமொழியாய் - பண்ணைப்போலப் பேசுகின்ற குளிர்ச்சி பொருந்திய சொல்லையுடையவளே,—நெஞ்சு ஓங்கு பரத்து உற்றோர் - (தம்முடைய) மனம் உயர்ந்த பதியினிடத்தே அழுந்தப்பெற்ற ஞானிகள்,—உடற்கு வரும் இடர் அடுக்கும் ஒருகோடி ஆக - (தம்முடைய) சரீரத்துக்கு வருந்துன்பங்கள் அடுக்கிச் சொல்லப்படும் ஒரு கோடியளவினவாக இருந்தாலும்,—நடுக்கம் உறார் - அச்சமடையார்,—மதி மான் மண்ணில் புலியை அஞ்சுமோ - சந்திரனிடத்தில் இருக்கின்ற மானானது பூமியில் இருக்கின்ற புலிகளுக்குப் பயப்படுமோ (பயப்படாது.) எ - று.

இ-ம். கடவுளிடத்து மனமழுந்தப்பெற்றவர் எத்துணைப் பெருந்துன்பங்களுக்கும் அஞ்சார். எ-ம்.

௩௦. இ - ள். கொள்ளும் கொடும் கூற்றம் கொல்வான் குறுகுதல் முன் - (உயிரைக் கொண்டு செல்கின்ற கொடுமையாகிய யமனானவன் கொல்லும்படி அணுகுதற்கு முன்னே,—உள்ளம் கனிந்து அறம் செய்து உய்க - மனங் கரைந்து தருமங்களைச்செய்து பிழைக்கக்கடவாய்,—வெள்ளம் வருவதற்கு முன்னர் அணை கோலிவையார்-வெள்ளம் வருவதற்கு முன்னே கரையைக்கட்டி வையாதவர்,—பெருகுதற்கண் என் செய்வார் பேசு - (அது) பெருகிவரும் பொழுது யாது செய்வார்! நீ சொல்வாயாக. எ - று. ஏ அசை.

இ-ம். மரணம் வருமுன்னே தருமத்தை விரைந்து செய்தல் வேண்டும். எ-ம்.

௩௧. இ - ள். நேர் இழாய் - தகுதியாகிய ஆபரணத்தையுடையவளே,—பேர் அறிஞர் - பெரிய அறிவையுடையவர்,—தாக்கும் பிறர் துயரம் வீரமொடு தாங்கி - வருத்துகின்ற பிறருடைய துன்பத்தை வீரத்தோடு தாம் ஏற்றுக்கொண்டு,—காக்க விரைகுவார் - (அவரைப்) பாதுகாத்தற்கு விரைந்து போவார்,—மெய் சென்று தாக்கும் வியன் கோல் அடி—உடம்பிலே போய்த் தாக்குகின்ற பெரிய கோலினுடைய அடியை,—கை கடிதுசென்று தம் மேல் தாங்கும் - கையானது சீக்கிரம் போய்த் தன்மேலே (படும்படி) ஏற்றுக்கொள்ளும். எ - று. ஏ அசை.

இ-ம். பேரறிவுடையோர் பிறருக்குவருந்துன்பத்தைவிரைந்து நீக்குவர். எ-ம்.

௩௨. இ - ள். நல் நுதால்-நல்ல நெற்றியையுடையவளே,—பன்னும் பனுவல் பயன் தேர் அறிவு இலார் - சொல்லப்படுகின்ற நூல்களினது பொருளை அறியும் விவேகமில்லாதவருடைய,—மன்னும் அறங்கள் வலி இலவே - மிகுந்த தருமங்கள் உறுதியில்லாதனவேயாம்,—காழ் ஒன்று உயர் திண் கதவு - வயிரம்பொருந்திய உயர்ந்த வலிய கதவானது,—தாழ் ஒன்று இலது ஆயின் வலி உடைத்தோ - ஒரு தாழ் இல்லாததாயின் உறுதியை உடைத்தாகுமோ (உடைத்தாகாது.) எ - று. தான் அசை.

இ-ம். விதிவிலக்குகளைப் பகுத்தறியும் அறிவில்லாதவர் செய்யுந் தருமங்கள் பயன்படா. எ-ம்.

௩௩. இ - ள். இழிஞர் எள்ளாது இருப்பப் போற்றற்கு உரியர் - அறிவில்லாத சிறியோர் (தம்மைப் பிறர்) இகழாதிருக்கும்படி காக்கப்படுதற்கு உரியவராவர்,—விள்ளா அறிஞர் அதுவேண்டார் - நீங்காத அறிவையுடைய பெரியோர் அங்ஙனங் காக்கப்படுதலை

வேண்டார்,—நீர் கட்டு குளம் தள்ளாக் கரை காப்பு உளதோ - நீரைக் கட்டிவைக்கின்ற (சிறிய) குளமே தள்ளப்படாத கரை காவலாக உள்ளது,—அன்றிக் கடல் கரை காப்பு உளதோ - அதுவல்லாமற் (பெரிய) கடலானது கரை காவலாக உள்ளதோ (உள்ளதன்று.) எ - று. ஏ அசை.

இ-ம். பிறர் இகழாவண்ணங் காக்கப்படுதல் சிறியோருக்கன்றிப் பெரியோருக்கு வேண்டுவதில்லை. எ-ம்.

௰ச. இ - ள். பிறை நுதால் - பிறைபோலும் நெற்றியையுடையவளே,—அறிவு உடையார் அன்றி - அறிவுடையவரேயல்லாமல்,—அது பெறார் - அவ்வறிவைப் பெறாத மூடர்,—தம்பால் செறி பழியைச் சிறிதும் அஞ்சார் - தம்மிடத்தில் நெருங்கிவரும் பழிக்குச் சிறிதும் அஞ்சார்,—வண்ணம் செய் வாள் விழியே அன்றி - அழகு செய்கின்ற ஒளியையுடைய கண்களேயல்லாமல்,—மறை குருட்டுக் கண் - (ஒளி) மறைந்த குருட்டுக் கண்களானவை,—இருளைக் கண்டு அஞ்சுமோ - இருட்டைக் கண்டு அஞ்சுமோ (அஞ்சா.) எ - று.

இ-ம். பழிக்கு அறிவுடையோர் அஞ்சுவர், மூடர் அஞ்சார். எ-ம்.

௰ரு. இ - ள். வெற்றி நெடும் வேல் வேண்டும் வாள் விழியாய் - வெற்றியையுடைய நெடிய வேற்படை விரும்புகின்ற ஒளி பொருந்திய கண்களையுடையவளே,—கற்ற அறிவினரை மேன்மக்கள் காமுறுவர் - (நூல்களைக்) கற்ற அறிவுடையவரை மேலோர் விரும்புவர்,—மற்றையர் என்றும் மதியார் - கீழோர் (அவரை) எப்போதும் மதியார்,—வாழைப்பழம் பால் வேண்டும் - வாழைப்பழத்தைத்(தித்திப்பாகிய) பாலானது அவாவும்,—புளிங்காடி வேண்டா - புளிப்பாகிய காடிநீரானது (அதனை) அவாவாது. எ - று. தாம், ஏ அசை.

இ-ம். கல்வியறிவுடையவரை மேன்மக்களே விரும்புவர், கீழ்மக்கள் விரும்பார். எ-ம்.

௰சா. இ - ள். தக்கார்க்கே ஈவர் தகார்க்கு அளிப்பார் இல் என்று - யோக்கியருக்கே கொடுப்பார் அயோக்கியருக்குக் கொடுப்பவர் இல்லையென்று அறிந்து,—விழுமியோர் மிக்கார்க்கு உதவார் - மேலோர் நன்னெறி கடந்தவராகிய அயோக்கியருக்குக் கொடார்,—எக்காலும் நீர் நெல்லுக்கு இறைப்பதே அன்றி - எக்காலத்தும் நீரை நெற்பயிருக்கே இறைப்பதல்லாமல்,—காட்டு மூளி புல்லுக்குப்போய் இறைப்பரோ - காட்டினிடத்தே உலரும் புல்லுக்குப் போய் இறைப்பாரோ (இறையார்). எ - று.

இ-ம். மேலோர் யோக்கியருக்கன்றி அயோக்கியருக்குக் கொடார். எ-ம்.

௰எ. இ - ள். பொன் உயர்வு தீர்த்த புணர்முலையாய் - இலக்குமியுடைய உயர்வை (அழகினாலே) நீக்கிய நெருங்கிய தனங்களையுடையவளே,—பெரியோர் முன் தன்னைப் புனைந்து உரைத்த பேதை - பெரியோர்முன்னே தன்னைச் சிறப்பித்துச் சொல்லிய மூடன்,—உயர்வு தரியாது அகன்று தாழும் - உயர்வைப் பெறாது இழந்து தாழ்வையடைவன்,— விந்தமலை தாழ்ந்து தன் உயர்வு தீர்ந்தன்று - (அகத்தியமுனிவர் முன்னே தன்னைச் சிறப்பித்துச் சொல்லிய)விந்தமலையானது (அவர் கையினாலே ஊன்றப்பாதாளத்திலே) தாழ்ந்து தன்னுடைய உயர்வுநீங்கியது,—தெரியாய் கொல் - (நீ அதனை) அறியாயோ. எ - று.

இ-ம். பெரியோரெதிரே தன்னைப் புகழ்ந்துரைத்தவன் தாழ்வையடைவன். எ-ம்.

௰அ. இ - ள். நல்லாய் கேள் - நற்குணத்தையுடையவளே கேட்பாயாக,—நல்லார் செயும் கேண்மை நாடோறும் நன்றாகும் - நல்லோர் செய்யுஞ் சிநேகமானது தினந்தோறும் நன்றாகி வளரும்,—அல்லார் செயும் கேண்மை ஆகாது - தீயோர் செய்யுஞ் சிநேகமானது நல்லதாகாது,—காய்முற்றின் தின் தீம் கனி ஆம் - காயானது (நாள் சென்று) முற்றினால் தின்னுதற்குரிய மதுரமாகிய கனியாகும்,—இளம் தளிர் நாள்போய் முற்றின் என் ஆகிப்போம் - இளந்தளிரானது நாள் சென்று முற்றினால் யாதாகிப் போகும். எ - று. ஏ அசை.

இ-ம். நல்லோர் நட்பு நாள் செல்லச் செல்ல இனிதாகும், தீயோர் நட்பு அங்ஙனமாகாது கெடும். எ-ம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௩௯. இ - ள். பொன் தொடீ - பொன்னாலாகிய வளையல்களையுடையவளே,—கற்று அறியார் செய்யும் கடு நட்பும் - கற்றறியாதவர்கள் செய்கின்ற மிகுதியாகிய சிநேகமும்,—தாம்கூடி உற்ற ஊழியும் - (நெடுங்காலம்) தாங்கள் கூடி இருந்தவிடத்தும்,—தீமை நிகழ்வே உள்ளது - தீங்கு விளைதலே உள்ளதாகும்,—சென்று படர்ந்த செழுங் கொடி மென்பூ - போய்ப்படர்ந்த செழுமையாகிய கொடியினது மிருதுவாகிய பூவானது,—மலர்ந்த அன்றே மணம் உடையது ஆம் - மலர்ந்த அன்றைக்கு மாத்திரமே வாசனையை உடையதாகும். எ - று.

இ-ம். மூடருடையநட்புத் தொடக்கத்திலே நன்றாயினும் பின்பு தீங்கு விளைவிக்கும். எ-ம்.

௪௰. இ - ள். பொன்னே - இலக்குமியைப் போன்றவளே,—பொன் அணியும் வேந்தர் - பொன்னாலாகிய ஆபரணத்தை அணியும் அரசர்,—புனையாப் பெருங் கல்வி மன்னும் அறிஞரை ஒவ்வார்-(அதனை) அணியாதபெரிய கல்விப்பொருள் நிலைபெற்ற விவேகிகளுக்கு ஒப்பாகார்,—மின்னும் அணி பூணும் பிற உறுப்பு-விளங்குகின்ற ஆபரணத்தை அணிந்துகொள்கின்ற (கை கால் முதலிய) மற்றை அவயவங்களானவை,—அது புனையாக் காணும் கண் ஒக்குமோ - அதனை அணியாத பார்க்கின்ற கண்களுக்கு ஒப்பாகுமோ (ஒப்பாகா.) எ - று. தாம், மற்று அசை. காண் முன்னிலையசை.

இ-ம். வித்துவான்களுக்கு அரசர்களும் ஒப்பாகார். எ-ம்.

நன்னெறியுரை முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகடன பத்திரம்

திருவள்ளுவர் பரிமேலழகருரை விலை ரூ. 5.

இராமநாதபுர சமஸ்தானாதிபதியின் விருப்பத்தின்படி முதல் முதல் (1869) நாவலரால் அச்சிடப்பட்டது. மற்றப் பதிப்புக ளெல்லாம் பின்னர் வந்தனவே.

சிவஞானத் தெளிவுபதேசத்திரயம் விலை அணா 8.

சிவஞானசுவாமிகளின் முதல் மாணவராகிய கச்சியப்ப முனிவர் பாடிய பேரூர்ப்புராணம், தணிகைப்புராணம், திருவானைக்காப்புராணம் முதலியவற்றில் அவர் விளக்கிய சைவசித்தாந்தக் கருத்துக்களமைந்த பாக்களின் தொகுதி.

சமயாசாரியர் சந்தானாசாரியர் சரித்திர சங்கிரகம் விலை அணா 8.

எளியநடையில் சமயகுரவர் நால்வர் சரித்திரங்களையும் சந்தானகுரவர் சரித்திரங்களையும் சுருக்கமாகக் கூறுவது. இதனோடு நால்வர் நான்மணிமாலையுரையும், சந்தானகுரவர் மாலைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

நன்னூற்காண்டிகையுரை விலை ரூ. 3 12.

பல காண்டிகையுரை இருந்தும் இதுவே பி. ஏ. பாடபுத்தக மாக நியமிக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பைக் காட்டு கின்றது.

முதற்பாலபாடம்	விலை அணா	3.
இரண்டாம்பாலபாடம்	,,	5.
மூன்றாம்பாலபாடம்	,,	10.
நான்காம்பாலபாடம்	ரூ. 1	12.

தமிழராயுள்ளவர் இந்நான்கு பாலபாட புத்தகங்களையும் படிப்பாராயின் தமிழ்ப்பற்றும் சைவப்பற்றும் ஓங்கிவளரும். நான்காம் பாலபாடம் மிகச்சிறந்தது. தமிழ்வசன நடைக்கு ஏணிபோலுள்ளவை இவை யென்பதாம்.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்

வித்தியாநுபாலன அச்சகம்,

நெ. 300, தங்கசாலைவீதி, சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org